2096

| | |
|---|---|
| வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம் | |
| இரண்டாம் தவணைப் பரீட்சை – 2018 | |
| தரம் - 6 | செயன்முறைத் தொழிநுட்பத்திறன் | நேரம் :- 2.00 மணித்தியாலம் |

சுட்டெண் :- ......................................

## பகுதி – I

❖ மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து.

01. அலங்காரத் தாவரங்களை வளர்ப்பதனால் கிடைக்கத்தக்க நன்மையாகக் கருதப்படக்கூடியது
    1) சுற்றாடல் பல்வகைத் தன்மை பெறல் 2) சூழல் அழகு பெறல்
    3) திருப்தியும் மனநிறைவும் கிடைத்தல் 4) மேற்கூறிய யாவும் சரி

02. பின்வருவனவற்றுள் தொங்கும் தாவரத்திற்கு உதாரணமாக அமைவது
    1) ஸ்பைடர் பிளான்ட் 2) சைபிரஸ் 3) இக்ஸோரா 4) அலமெந்தா

03. நடப்பட்ட கன்றுகளை மீண்டும் சாடிக்குச் சாடி மாற்றி நட வேண்டிய சந்தர்ப்பமாக அமைவது
    1) தாவரம் நல்ல செழிப்பாக வளரும் போது
    2) அத்தாவர வேர்கள் சாடிக்கு வெளியே வரும் போது
    3) ஊடகம் நன்றாக நிரப்பப்பட்டிருக்கும் போது
    4) சாடியில் பரந்து வளர அதிக இடவசதி உள்ள போது

04. சோற்றுக் கற்றாளை எனப்படுவது
    1) அது அலங்காரப் பூக்கள் கொண்ட தாவரமாகும்
    2) அது சோறு சமைக்கப் பயன்படும் தாவரமாகும்.
    3) அது அலங்காரமான இலைத்தாவரமாகும்
    4) அது அலங்காரக் காய்களைக் கொண்ட தாவரமாகும்

05. சமையலறையொன்றின் கழுவும் தொட்டி (Sink) அமைக்கப்படுவது
    1) கதவின் அருகேயாகும் 2) யன்னலின் அருகேயாகும்
    3) சமையலறையின் வெளியிலாகும் 4) குளிர்சாதனப் பெட்டியின் அருகிலாகும்

06. அதிக இடவசதியுள்ள இடத்திற்குப் பொருத்தமான சமையலறையாகக் கருதக்கூடியது
    1) I வடிவ சமையலறை 2) L வடிவ சமையலறை
    3) U வடிவ சமையலறை 4) S வடிவ சமையலறை

07. முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட சமையலறை மூலம் கிடைக்கத்தக்க நன்மையாக அமைவது
    1) உணவு சமைத்தல் தாமதமடைதல்
    2) செயற்பாடுகளை மேற்கொள்வது கடினமாதல்
    3) நேரமும் உழைப்பும் மீதப்படல்
    4) பாதுகாப்பான உணவை பராமரிக்க முடியாதிருத்தல்

08. சமயலறையின் செயற்பாட்டு அலகுகள் மூன்றும் சமையலறைக்குள்ளே இடப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய முறை

1) அலகுகள் வலமிருந்து இடமாகச் செல்லுமாறு இடப்படுத்தப்பட்டிருத்தல்.
2) அலகுகள் இடமிருந்து வலமாகச் செல்லுமாறு இடப்படுத்தப்பட்டிருத்தல்.
3) தனித்தனி அலகுகளாக பிரித்து இடப்படுத்தப்பட்டிருத்தல்.
4) அலகுகளிற்கிடையே அதிக இடைவெளி காணப்படும் வகையில் இடப்படுத்தப்பட்டிருத்தல்.

09. பொதிகளில் அடங்கியுள்ள பொருட்களை இனங்காண்பதற்கேற்ற இலகுவான முறையாகக் கருதப்படுவது

1) பொருட்களிற்குப் புதிய பெயர் வைத்தல்.
2) பொருட்களை கறுப்பு நிறமுள்ள போத்தல்களில் அடைத்து வைத்தல்.
3) சுவைத்துப் பார்த்து இனங்காணல்
4) சுட்டுத்துண்டிடல்

10. தரக்கருவிப் பட்டை என்பதன் ஆங்கிலப்பதமாக அமைவது

1) Formatting toolbar 2) Drawing toolbar 3) Standard toolbar 4) Menu bar

11. பழங்கள், காய்கறிகளை வெட்டும் போது சரியான கூரான உபகரணங்களைப் பயன்படுத்துவதன் நோக்கமாக அமைவது

1) அவற்றின் அளவை அதிகரித்தல் 2) தேவையற்ற பாகங்களை வெட்டல்
3) வீணாகும் அளவைக் குறைத்தல் 4) மேற்கூறிய எதுவுமில்லை

12. குடும்பத்திலுள்ளவர்கள் இலகுவாக உழைக்கும் வழிமுறையாக கருதப்பட முடியாதது

1) அலங்காரப் பயிர்ச்செய்கையில் ஈடுபடல்
2) வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபடல்
3) மோசடியான செயற்பாடுகளில் ஈடுபட்டுப் பணம் மீட்டல்
4) கால்துடைப்பான் தயாரிப்பில் ஈடுபட்டுப் பணமீட்டல்.

13. நிதி நிறுவனங்களில் பணத்தைச் சேமிக்கும் போது நாம் கவனத்திற்கொள்ள வேண்டிய புத்திசாலித்தனமான செயற்பாடாக அமைவது

1) இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்களில் சேமித்தல்.
2) இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்களில் சேமித்தல்.
3) வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்களில் சேமித்தல்.
4) பதிவு செய்யப்படாத வங்கிகளில் சேமித்தல்

14. சேமிப்பை ஊக்குவிப்பதற்கு நிதி நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை


1) இலகு கடன் வழங்குதல்
2) உண்டியல்களையும் பரிசுப்பொருட்களையும் வழங்குதல்
3) சேமிப்பு வைப்பிற்கு மிகக் குறைந்த வட்டி வழங்கல்
4) சேமிப்பின் மகத்துவத்தை உணர்த்தாதிருத்தல்

15. நீண்ட காலம் சில்லறைக் காசை தேக்கி வைத்திருப்பதனால் ஏற்படத்தக்க விளைவாக கருதப்படக்கூடியது.

1) நாட்டில் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய சில்லறைகளிற்குப் பற்றாக்குறை ஏற்படல்.
2) சில்லறைக் காசுகளைப் பயன்படுத்தி அலங்காரப் பொருட்களை உருவாக்குதல் இலகுவாதல்
3) சில்லறைக் காசுகளை எண்ணுவதும் கொண்டு செல்வதும் இலகுவாக இல்லாதிருத்தல்.
4) சில்லறைக் காசுகளை தயாரிப்பதற்கான இயந்திரங்கள் நாட்டில் இல்லாமையால் அவற்றை தயாரிப்பது கடினமாதல்

16. ஒரு உருவைப் போன்ற பல உருக்களை பல்வேறு இடங்களில் இடுவதற்குப் பயன்படுத்தப்படும் முறை

1) நீர்வர்ணப் பதிப்பு முறையாகும்
2) பெயின்ற் அடித்தல் முறையாகும்
3) ஸ்டென்சில் முறையாகும்
4) ஊடகத்தைப் பயன்படுத்தும் முறையாகும்

17. 

உருவில் காணப்படும் சமையலறை குறியீடு எதனைக் குறிக்கிறது.

1) சமையலறையின் சுவரினை
2) சமையலறையின் யன்னலினை
3) சமையலறையின் சமைக்கும் அலகினை
4) சமையலறையின் கதவினை

18. எளிய ஆடைகளின் வடிவமைப்பின் போது வடிவங்களாகப் பயன்படுத்தப்படும் படங்களை ஒட்டப்பயன்படுவது

1) பைண்டர் கம்
2) துணி ஒட்டும் பசை
3) சாதாரண பசை
4) வாட்டர் பெயின்ற்

19. சுட்டுத்துண்டு ஒன்றைத் தயாரிக்கும் முறைகளாகக் கருதப்படுவது

1) நிறப்போசணைகளால் கையால் வரைதல்
2) பொருத்தமான படங்களை ஒட்டுதல்
3) அச்சிடப்பட்ட படங்களை ஒட்டுதல்
4) மேற்கூறிய யாவும் சரியாகும்.

20. சமையலறையொன்றில் துடை துண்டுகள் பயன்படுத்துவதன் நோக்கமாக அமைவது

1) சூடான பாத்திரங்களைப் பிடிப்பதற்கு
2) உணவு சமைப்பவர் முகத்தைத் துடைப்பதற்கு
3) உணவு சமைப்பவரின் வாய்க்கவசமாகப் பயன்படுத்துவதற்கு
4) உணவுப் பாத்திரங்களை அதன் மீது வைப்பதற்கு.

(20X1=20 புள்ளிகள்)

## பகுதி II

❖ **முதலாம் வினா கட்டாயமானதாகும். ஏனைய வினாக்களில் இரண்டினைத் தெரிவு செய்து மொத்தம் மூன்று வினாக்களிற்கு விடையளிக்க.**

*01.*

1) திட்டமிட்டு அமைக்கப்பட்ட சமையலறையில் வேலை செய்யும் போது ஏற்படும் நன்மைகள் நான்கினைக் குறிப்பிடுக.
2) உணவு பரிமாறலுக்குரிய பகுதியில் காணப்படத்தக்க பொருட்கள் நான்கினைக் குறிப்பிடுக.
3) முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட சமையலறையின் இயல்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.
4) தேவையற்ற வீட்டுச் செலவுகளைக் குறைப்பதற்கு மேற்கொள்ளத்தக்க சிக்கன நடவடிக்கைகள் நான்கினை எழுதுக.
5) உமது பாடசாலையில் வளர்க்கத்தக்க அலங்கார இலைத்தாவரங்கள் இரண்டினையும் அலங்காரப் பூக்கள் கொண்ட தாவரங்கள் இரண்டினையும் குறிப்பிடுக.

(5X2=10 புள்ளிகள்)

*02.*

1) கன்றுகளை நாற்றுச்சாடியில் நடுவதற்கெனப் பயன்படுத்தப்படும் ஊடகங்கள் எவையெனக் குறிப்பிடுக.
2) நாற்றுச் சாடிகளின் அடியில் துவாரம் இடப்படுவதன் நோக்கம் எதுவெனக் குறிப்பிடுக.
3) சமையலறையில் தரமான உணவுகளைத் தயாரிக்கும் போது கவனிக்க வேண்டிய மூன்று முக்கிய விடயங்களும் எவை?
4) சேமிப்பை மேற்கொள்வதற்கு ஏற்ற நிதி நிறுவனங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
5) அரச வங்கிகள் இரண்டின் பெயர்களை எழுதுக.

(5X2=10 புள்ளிகள்)

*03.*

1) முற்கால இலங்கையில் 'பிடியரிசிப்பானை' பயன்படுத்தப்பட்டதன் நோக்கம் எதுவெனக் குறிப்பிடுக.
2) ஸ்டென்சில் அச்சுப் பதித்தல் முறைக்கெனப் பயன்படுத்தப்படும் பொருட்கள் இரண்டு தருக.
3) சுயதொழில் மூலம் நபரொருவரிற்குக் கிடைக்கத்தக்க அனு கூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
4) உமது பிரதேசத்தில் காணப்படத்தக்க தனியார் வங்கிகள் இரண்டின் பெயர்களை எழுதுக.
5) நிதி நிறுவனங்களில் சேமிப்பதனால் கிடைக்கத்தக்க நன்மை ஒன்றினைக் குறிப்பிடுக.

(5X2=10 புள்ளிகள்)

*04.*

1) சமையலறையைத் திட்டமிடும் போது கவனிக்க வேண்டிய முக்கிய விடயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
2) பின்வருவனவற்றின் குறியீடுகளை வரைந்து காட்டுக.
   1. சமையலறைச் சுவர்
   2. சமையலறை யன்னல்
3) வரையறுக்கப்பட்ட இடத்திற்கு எவ்வடிவ சமையலறை பொருத்தமானது என்பதனைக் குறிப்பிடுக.
4) திருமண கேக் பெட்டியொன்றினை ஆக்கத் தேவையான பொருட்கள் நான்கினைக் குறிப்பிடுக.
5) அலங்காரத் தாவரங்களைச் சாடிகளில் நாட்டி வளர்க்கப்படுவதன் நோக்கங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(5X2=10 புள்ளிகள்)

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் O/L வரை**

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
ZOOM APP மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**